Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி௵ (1889) ஆவணி௴ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி:சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரி௵ ஆடி௴ எஉ வெள்ளிக்கிழமை (22 JULY. 1960) [இல-கசு]

# திருக்கேதீச்சரத்துக்குச் சம்பந்தசுவாமிகளின் திருவுருவம்

## கீரிமலையில் ஊர்வலம் ஆரம்பமாகி சம்பந்தர் மடத்திற் பிரதிட்டை

—:o:—



இற்றைக்குப் பன்னிரண்டு வருடங்கட்கு முன்பு வைதீக சைவசித்தாந்த சிகாமணி ஒருவரால் திருக்கேதீச்சரத்தில் ஆரம்பிக்கப்பட்டசம்பந்தசுவாமிகள் மடம் பலசிவனடியார்களின் நன் முயற்சியால் நிறைவேற்றப்பட்டது. ஆனல் மடத்தின் பெயருக்கேற்ப சுவாமிகளின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்படவில்லை. ஆகையினலே திருக்கேதீச்சரப் பாத யாத்திரையாளர்களாகிய இலங்கைச் சிவனடியார் கூட்டத்தார் சம்பந்த சுவாமிகளின் விக்கிரகம் ஒன்று செய்து கதிர்காமத் திருவிழா நாளில் சம்பந்த சுவாமி திருமடத்தில் பிரதிட்டை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திருஞானசம்பந்தசுவாமிகளின் விக்கிரகம் முத்துப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து 1-8-60 திங்கட்கிழமை மாலை நான்கு மணியளவில் கீரிமலை நகுலேஸ்வரசுவாமி சந்நிதானத்தை வலஞ்செய்து புறப்பட்டு பக்திப்பாடற் குழுவினருடன் அன்று மாலை 8 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை அடையும். அங்கு பிரார்த்தனை பூசை முதலியன செய்து, வீதி வலம் வந்து தெல்லிப்பழைச் சந்திக்கூடாக இரவு 8 மணியளவில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் சந்நிதியை யடையும். அங்கிருந்து அடுத்த நாள் புறப்பட்டுச் சுன்னுகம் வழியாய்ச் சென்று இராமநாதன் மகளிர் கழகத்திற் சிறிதுநேரம் தங்கி இணுவில் கந்தசுவாமி கோயில் சந்நிதானத்தை அடையும். பின்பு கோண்டாவிலுக்கூடாகச்சென்று பகல் 12 மணிக்குக் கொக்குவில் திருமஞ்சவனப்பதியை அடையும். அங்கு மகேஸ்வரபூசை நடைபெறும். மாலை நாலு மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு வண்ணைச் சிவன்கோயில் மண்டபத்தையடையும். அங்கிருந்து நாவலர் மண்டபத்துக்குப்போய், நல்லூர்க் கந்தசுவாமிகோயிலை இரவு 8 மணியளவில் அடையும். பின்பு சாவகச்சேரி தனங்கிளப்புக்கூடாகச் சென்று பூநகரியை யடைந்து அவ்வழியாய், திருக்கேதீச்சரத்தையடையும். இதற்கிடையில் சுவாமி தங்கிச் செல்லும் இடங்களில் அன்பர்கள் அடியார்கள் காணிக்கையாக அர்ச்சனைசெய்து விபூதிப்பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம். பாத யாத்திரை செய்ய விரும்புகிறவர்களும் இக் கூட்டத்தார்களோடு சேர்ந்து செல்லலாம்.

——

## சத்தியத்தின் மேன்மை

சத்தியத்தைப் பத்திசிரத்தையுடன் மனிதர் கடைப்பிடிப்பார்களேயானல் கடவுளின் சத்தியை உணர்தல் கூடும். அன்றேல் மிருக பலத்தையே அடைதல்கூடும் என்று பதுளை கதிரேசன் கோயிலிற் சொற்பொழிவாற்றும்போது ஸ்ரீ யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் கூறினர்கள்.

——

## இந்திய வேலை நிறுத்தம்

——

இந்திய அரசாங்கஊழியரின் வேலை நிறுத்தம் அங்குமிங்குமாய் ஐந்து நாள் நடந்து இறுதியில் நிறுத்தப்படலாயிற்று. எந்தவிதமாயும் அரசாங்கம் வேலை நிறுத்தகாரருக்கு விட்டுக் கொடுக்கவில்லையென்பது குறிப்பிடப்படுகின்றது.

——

## நற்சிந்தனை

பிறவார்கள் இறவார்கள்
பிறிதொன்று லயரார்கள்
கரவார்கள் உழலார்கள்
கண்டதிலே மனம்வையார்
அறநெறியில் வழுவார்கள்
அன்பர்பணி மறவார்கள்
பிறவொன்று மறியார்கள்
பிரியாத சிந்தையரே.

(சிவ தொண்டன்)

## நாடு எதிர்பார்த்த பொதுத்தேர்தல்

இன வெறியர்கள் இந் நாட்டுமக்களை ஆயிரத்துத்தொளாயிரத்தைம் பத்தெட்டில் ஆற்றெணுத் துயரத்துக்குள்ளாக்கினர். ஆறுதல் என்று வருமென்று ஏங்கியிருந்த மக்கள் பங்குனி பத்தொன்பதின் முடிவுகளை ஆவலுடன் எதிர்பார்த்தனர். பாழான மனநிலைமையால் பாராளுமன்றம் குலைக்கப்பட்டது.

அடுத்த பொதுத் தேர்தல் ஆறுதல் தருமோ என்ற ஏக்கம் மக்கள் மனதைக் கலக்கி நின்றது. இன்பமும் துன்பமும் கலந்ததே இவ்வுலகு என்றபடி நேற்றைய தேர்தல் நிகழ்ந்து நிறைவுற்றது. உட் பக்கத்திற் காணக்கிடக்கின்றன முடிவுகள்.

——

## ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத முன்னநாதஸ்வாமி மஹோற்சவம்

மேற்படி மகோற்சவம் ஆடி 25உ (9-8-60) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணி 21உ திங்கட்கிழமை (5-9-60) தீர்த்தத் திருவிழா நடைபெற்று நிறைவுறும்.

விசேட குறிப்புகள் சில பின்வருமாறு:—

சிவனடியார் திருவிழா (31-8 60) புதன்கிழமை மாலை

பிக்ஷாடனர் திருவிழா: (1-9-60) வியாழக்கிழமை.

நடேசர் திருவிழா: வெள்ளிக்கிழமை, வேட்டைத்திருவிழா; சனிக்கிழமை. தேர்த் திருவிழா: ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னநாதஸ்வாமிக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேஷ ஆராதனைகள், பகல் 10-35 மணிக்கு மஹாரதத்துக்கு எழுந்தருளல், 12 மணிக்கு மஹாரதத் திருவுலாக் கொண்டருளல், மாலை 6 மணிக்கு மஹாரதத்திலிருந்து ஆலயத்துக்கு எழுந்தருளல், தீர்த்தத் திருவிழா: காலை 6 மணி முதல் 8 மணி முதல் 10 மணிவரை சுவாமி மாயவனாற்றுக்கு எழுந்தருளல், 10 மணிமுதல் 12 மணி வரை மாயவனாற்றில் தீர்த்தங்கொடுத்தருளல். பகல் 12 மணி முதல் 2 மணிவரை மாயவனாற்றங் கரையிலிருக்கும் வடிவழகியம்மன் தோட்டத் தீர்த்தத் திருமடத்தில் எழுந்தருளி, அம் மடாதிபதிகளால் நடத்தப்பெறும் அபிஷேகம், ஆராதனை, அன்னதானம் முதலியவைகளை ஏற்று அருள் புரிதல்.

மாலை 5 மணி முதல் 10 மணி வரை சர்வாலங்கிருத ரதத்தில் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாதசுவாமியை எழுந்தருளச்செய்து பலவித ராஜோபசார வாத்யகோஷங்களோடு ஆலயத்துக்கு எழுந்தருளச் செய்தல்.

——

## திருக்கேதீச்சர ஆலயத்தில்

### சார்வரி வருடம் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் நடைபெறும் உற்சவங்கள்

### அடியார்களுக்குப் பஞ்சாயத்தாரின் அழைப்பு

1-7-60 ஆனி உத்திரம்:- பகல் நடராசர் அபிஷேகமும் விசேட பூசையும்: இரவு நடராசப்பெருமான் சிவகாமி அம்பாள் சமேதராய் வீதி வலம்வரும் விழாவும் நடைபெறும்.

11-7-60 மஹா சங்காபிஷேகம்:- பகல் கேதீச்சர நாதருக்கும் கௌரி அம்பாளுக்கும் மகாசங்காபிஷேகமும் விசேட பூசையும், மாலை தேவார பாராயணம், சைவப் பிரசங்கங்களும், இரவு சுவாமி அம்பாள் வீதிவலம்வரும் மணவாளக்கோல உற்சவமும் நடைபெறும்.

23-7-60 ஆடி அமாவாசை:- காலை 7 மணிக்கு சோமாஸ்கந்தமூர்த்தி அம்பிகை சமேதராய் எழுந்தருளிப் பாலாவியில் தீர்த்தமாடி வீதிவலம் வரும் விழா நடைபெறும்,

31-7-60 சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை:- பகல் சுவாமி அம்பாளுக்கு அபிஷேகமும் விசேட பூசையும் மாலை தேவாரபராயணமும், புராண படனம் சைவப்பிரசங்கங்கள் முதலியனவும் நடைபெறும்.

5-8 60 கதிர்காம சுவாமி விழா பகல் அபிஷேகமும் விசேட பூசையும் இரவு ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராய் எழுந்தருளி வீதிவலம்வரும் விழாவும் நடைபெறும்.

6-8-60 நிகழ்ச்சிகள் முதல் நாளையபோல்.

7-8-60 காலை 7 மணி அளவில் ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராய் எழுந்தருளி பாலாவியில் தீர்த்தமாடி அடியார்களுக்கு காட்சிகொடுத்து அருளுவார். மாலை சண்முகார்ச்சனையும் ஆராதனைகளும் நடைபெறும்,

26-8-60 ஆவணி சதுர்த்தி:- பகல் விநாயகப் பெருமானுக்கு அபிஷேகமும் விசேட பூசையும், இரவு விநாயகப் பெருமான் வீதிவலம்வரும் விழாவும் நடைபெறும்.

21-9-60 — 29-9-60 வரை நவராத்திரி பூசை:- இத்தினங்களில் இரவில் தினமும் நவராத்திரிபூசையும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் கொலு வீற்றிருக்கும் அலங்காரக் காட்சியும கும்பபூசையும் நடைபெறும்.

30-9-60 மானம்பு விழா:- விஜய தசமியன்று சுவாமி அம்பாள் மாலை 4 மணிக்கு எழுந்தருளி வேட்டையாமுறிப்புஆலயத்தை அடைந்து அங்கு அம்புபோட்டு அங்கிருந்து பாப்பாமோட்டை, முள்ளிக்கண்டல், அடம்பன், பிறவாட்டி வழியாக அடியார்களுக்குக் காட்சிகொடுத்து ஆலயத்தைச் சென்றடைவார்கள் என அறியத் தந்து, மேற்காணும் உற்சவ தினங்களில் அடியார்கள் திரளாக ஆலயத்துக்கு வந்து சுவாமி அம்பாளைத் தரிசித்து பாலாவியில் தீர்த்தமாடி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு பணிவாகக் கேட்கின்றோம். என்று சேர். க. வைத்தியநாதன் "பஞ்சாயத்தலைவர்" அவர்கள் அழைத்து நிற்கின்றார்கள்.

## கொழும்பு விவேகானந்த சபை

மேற்படி சபையின் ஆண்டு நிறைவுக்கூட்டம் நடைபெற்றுப் புத்தாண்டு உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப் பெற்றனர். விபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சார்வரிஹூ ஆடி மீ
எஉ வெள்ளிக்கிழமை

## மக்கள் அளித்த வாக்கு

=o=

பங்குனியி லிருந்த பயனற்ற ஆட்சி நிலையினின்றும் விடுபட்டு ஆடியில் அரசு அமைக்கும் வாய்ப்பு மக்களுக்கு உண்டாக்கப் பெற்றிருக்கின்றது. இது வரவேற்கப்படுவதொன்றெனினும் தனிக்கட்சிப் பலம் பெற்றிருக்கும் திருமதி சிறிமா பண்டாரநாயகவின் ஆட்சி இந்நாட்டு மக்கள் யாவருக்கும் முறையாகப் பயன் அளிக்குமா என்பது கேள்விக்கிடமாயிருக்கின்றது. தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றி இந்த ஆட்சி எவ்வாறு நடந்துகொள்ளும் என்று, சென்ற காலத்து நிகழ்ச்சிகளைக்கொண்டு நோக்குமிடத்து, அச்சத்துடனேயே ஆராயவேண்டியதாகின்றது. தமிழ் பேசும் மக்கள் அழுத்தம் திருத்தமாகத் தங்கள் தீர்ப்பை அளித்திருக்கின்றார். இணைப்பு ஆட்சிக் கட்சியைச் சேர்ந்த பதினறு அங்கத்தவர்களும் ஏனையோரும் ஒன்றுகலந்து பாராளுமன்றத்தில் உரிமைகளைப் பெற்றுத் தமிழகத்தின் பழைய பெருமையைப் பெற முயன்றுவருவார்கள் என்பதற்கையமின்று, ஆனல் ஆளுங்கட்சி எவ்வாறு இந்த உரிமைக் குரலுக்குச் செவிகொடுக்கும்? நாக்குளிர 'நாங்கள் உங்கள் உரிமைகளை ஒரு பொழுதும் அபகரிக்க மாட்டோமென்று' தேர்தற் காலங்களிலும் அரசு அமைக்கும் நெருக்கடி நிலைமைகளிலும் தேனொழுக அன்புருக ஆதரவு மொழி நவின்று வந்த பலவேறு கட்சிகளும் இந்தப் பாராளுமன்றத்திலே தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றித் தாமாகவே எடுத்துரைத்து நீதி செய்வார்களா என்பதுதான் நாம் கேட்கும் முதலாவது கேள்வி.

——

## கட்சிகளின் நிலைமை

| கட்சிகள் | போட்டியிட்டவை | வெற்றிபெற்றவை |
|---|---|---|
| சுதந்திரக்கட்சி | 98 | 75 |
| ஐ. தே. கட்சி | 128 | 30 |
| தமிழரசுக்கட்சி | ¿1 | 16 |
| எல். எஸ். எஸ். பி. | 21 | 12 |
| எல். பி. பி. | 6 | 2 |
| ஸி. பி. | 7 | 4 |
| எம். ஈ. பி, | 55 | 3 |
| ஜா. வி. பெ. | 2 | 2 |
| தமிழ்க் காங்கிரஸ் | 10 | 1 |
| மற்றவை | 36 | 6 |

# தேர்தல் முடிவு திட்டவட்டமானது

## ஐ. தே. க. விழுந்தது
## சுதந்திரக்கட்சி எழுந்தது

### சமஷ்டிக் கட்சிக்கு மகத்தான ஆதரவு

தேர்தல் முடிவுகள் வாக்காளர்களின் சிந்தனைச் சிறப்பைக் காட்டுகின்றன. தமிழகத்துத் தீர்ப்பு ஆணித்தரமானதுபோல மறுபாகத்திலே சுதந்திரக் கட்சியும் பலம் பெற்றுவிட்டது. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமவர்கள் 15668 வாக்குகள் பெற்று மாபெரும் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

**வட மாகாணம்**

**காங்கேசன்துறை**

எஸ் ஜே. வி. செல்வநாயகம் (த. அ) 15668
ஆர். என். சிவப்பிரகாசம் (த. கா.) 2099

**வட்டுக்கோட்டை**

அ. அமிர்தலிங்கம் (த. அ) 13464
அ. வைத்திலிங்கம் (பொ உ) 5206

**ஊர்காவற்றுறை**

வி. ஏ. கந்தையா (த. அ) 12110
எஸ். சேனுதிராசா (த. கா.) 2671

**உடுவில்**

வி. தர்மலிங்கம் (த. அ.) 11475
பி. நாகலிங்கம் (ல. ச. ச .க.) 6702

**யாழ்ப்பணம்**

ஏ. ரி. துரையப்பா (சு) 6313
ஜி. ஜி. பொன்னம்பலம் (த.கா) 6015
எஸ். கதிரவேற்பிள்ளை (த.அ) 5644

**கோப்பாய்**

எம். பாலசுந்தரம் (த. அ) 12088
ரி. குணரத்தினம் (த. கா) 5782

**நல்லூர்**

வைத்தியகலாநிதி ஈ. எம். வி. நாகநாதன் (த. அ) 11728
சி. அருளம்பலம் (த. கா ) 6195

**பருத்தித்துறை**

கே. துரைரத்தினம் (த. அ) 8026
எஸ் நடராசா (த, கா) 3968

**உடுப்பிட்டி**

எம். சிவசிதம்பரம் (த. கா.) 9080
கே. ஜயக்கொடி, (த. அ.) 7741
எஸ். ஜயசிங்கம் (பொ. உ.) 3445

**சாவகச்சேரி**

வி. என். நவரத்தினம் (த. அ) 14799
எஸ். கே. திரவியநாயகம் 2410

**வவுனியா**

ரி. சிவசிதம்பரம் ( சு. ) 7393
ஜி. பி. வின்சென்ற் (த. அ) 5418

**கிளிநொச்சி**

ஏ. சிவசுந்தரம் (த. அ)
வி. ஆநந்தசங்கரி (ல ச.ச.க.)

**மன்னர்**

வி. ஏ. அழகக்கோன் (த. அ) 7307
எஸ். எச். முகமது (ஐ.தே க) 5790

**கிழக்கு மாகாணம்**

**மட்டக்களப்பு (இரட்டைத்தொகுதி)**

எஸ். இராசதுரை (த. அ.) 29853
ஜனுப் இலத்தீப் சின்ன லெப்பை (த. அ) 2484
மக்கான் மரக்காயர் (ஐ.தே.க.) 21031
கே என் குமாரசாமி (த. கா.) 2300

**கல்முனை**

ஜனுப் எம். அகமது (த. அ.) 7661
முதலியார் எம். எஸ். காரியப்பர் (அ.இ.இ ஐமு) 5651

**கல்குடா**

பி. மாணிக்கவாசகர் (த. அ.) 7505
எஸ். சிவஞானம் (சுயேச்சை) 5295

**பட்டிருப்பு**

எஸ். எம். இராசமாணிக்கம் (த. அ 10948
எஸ். யு. எதிர்மன்னசிங்கம் த கா 5683
ஏ. பொன்னையா (சுயேச்சை) 247

**திருக்கோணமலை**

என். ஆர். இராசவரோதயம் (த. அ.) 8649
இ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி (ல. சு. க) 4614
கே. பி. ஆரியதாச எம் இ பி.) 67

**மூதூர் (இரட்டைத் தொகுதி)**

ரி. ஏகாம்பரம் (த. அ.) 13304
ஏ. எஸ். ஏ மஜித் ல. சு. க.) 13247
எம். இ. எச். முகம்மது அலி (ஐ. தே. க) 7914
எச். டி. எஸ். லீலாரத்தின (சு) 2116
பி. டி. இ. விக்ரர் பெரேரா (ம. மு.) 118

**நிந்தாவூர்**

ஜனுப் எம். ஐ. எம். மஜீத் (சு) (தமிழ் அரசு ஆதரவு) 12115
எம். ஏ. எம். ஜலால்டீன் (அ. இ இ. ஐ.மு.) 4339

**பொத்துவில்**

ஜனுப் எம். அப்துல் மஜீத் (சு) (தமிழ் அரசு ஆதரவு) 11591
எம். எஸ். கே. எம். காரியப்பர் (அ.இ.இ ஐ.மு) 837

**அம்பாரை**

ஈ. ஐ. டி. சொயிசா (ல.சு.க.) 5710
டி. பி. குணதிலக (ஐ. தே. க.) 3713
எம். எச்ஸ். பக்மீவேவ எம். இ. பி. 3325

——

## திருப்புகலூர் தலத்தில் நம்பிமுருகன் திருமடாலயம்

### ஆராய்ச்சிக் கலைஞர் கண்டுபிடித்தமை

சிதம்பரம். ஆடி. 11

செந்தமிழ் நாட்டில் ஸ்ரீ அப்பர் அடிகளார் சிவமுக்தி பெற்றுள்ள தலமாகிய திருப்புகலூரில் அந்தணர்குடியிலே தோன்றி, புகலூர்வர்த்தமான் ஈச்சரத்து இறைவர்க்குப் பூத்தொண்டு செய்து வந்த முருகநாயனாரால், புகலூரில் ஏற்படுத்தப்பெற்ற திருமடாலயத்தைப் பற்றியும், அம்மடாலயத்தில் ஞான சம்பந்தப் பெருந்தகையார், அப்பர் அடிகளார் திருநீலநக்கர், சிறுத்தொண்டர் ஆகியவர்கள் உடன் உறையும் பேறு பெற்றமைபற்றியும் திருத்தொண்டர் புராணத்தில் நன்கு அறிகின்றோம், அத்தகைய பேறுபெற்ற திருமடாலயம் திருப்புகலூர் வடக்குத் தெருவில் வடசிறகில் இருப்பதாக முதற்குலோத்துங்க சோழதேவரின் இற்றைக்கு 855 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங்காலக் கல்வெட்டை "கல்வெட்டு ஆராய்ச்சிக்கலைஞர்" அண்ணமலைப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறை ஆராய்ச்சியாளர் வித்துவான் ஸ்ரீ. வை சுந்தரேசவாண்டையார் கண்டுபிடித்துள்ளார்.

(திரு. மா.பா, தினமணிநிருபர்)

## மகோற்சவங்கள்

——

கோப்பாய் வடக்கு பலானை சிவகாமியம்மை கோயில், இராமேச்சரம் தேர் ஆடி 11உ (26-7-60) செவ்வாய்க்கிழமை தீர்த்தம் ஆடி 12உ (27 - 7 - 60 புதன்கிழமை; கதிர்காமம் கொடியேற்றம் ஆடி 8 உ (23-7-60) சனிக்கிழமை; இணுவில் காரைக்கால் சிவன்கோயில், காரைநகர் அரசடிக்காடு கதிர்காமசுவாமிகோயில், சாவகச்சேரி பன்றிக்கேணி கந்தசுவாமி கோயில், அல்வாய் முத்துமாரிகோயில், உகுந்தமலை வேலாயுதசுவாமி கோயில், சந்தி வெள்சித்தி விநாயகர் கோயில் கொடியேற்றம் ஆடி 8உ (23 7-60) சனிக்கிழமை; மாகியப்பிட்டி அங்கணம்மைக்கடவை மீனாட்சி கோயில் ஆடி 12உ (27-7-60) புதன்கிழமை கொடியேற்றம்; தாவடி கந்தசுவாமிகோயில் உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோயில், அராலி கரைப்பிட்டி விநாயகர் கோயில், குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் கோயில், தெல்லிப்பழை குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயில், கரணவாய் வடக்கு மூத்தநயினார் கோயில், கரவெட்டி கிழக்கு கரம்பான் வீரகத்திப்பிள்ளையார் கோயில், பலாலி இராஜஇராஜேஸ்வரிகோயில், உடுப்பிட்டி நெற்கொழு வைரவர் கோயில், அனலைதீவு ஐயனார் கோயில், எழுதுமட்டுவாள் வீழுபழை கண்ணகை கோயில். ஓமந்தை மருதோடைக் கந்தசுவாமி கோயில், அச்சுவேலிப் பிள்ளையார் கோயில், சங்கானை மகாதேவப் பிள்ளையார் கோயில், வேலணை பெருங்குளம் முத்துமாரி கோயில், மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோயில், புத்தளம் சேனைக்குடியிருப்பு கதிரேசசுவாமி கோயில் கொடியேற்றம் ஆடி, 13 உ (28-7-60) வியாழக்கிழமை.

——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர்மூர்த்தியின் அருட்பிரகாசம்

## திலகவதியாரின் தெய்விகத் தன்மை

ஸ்ரீ. சி. கணேசலிங்க ஐயர்
தெல்லிமாகர்

வளங்கள் எல்லாம் நிறைந்த திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே வேளாளர் குலத்திலே புகழனார் என்னும் பெரியவருக்கும், மாதினியாருக்கும் இரு குழந்தைகள் பிறந்தனர். மூத்த பிள்ளையின் பெயர் திலகவதியார். இளைய குழந்தையின் பெயர் மருணீக்கியார்.

பெண் குழந்தையாகிய திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதானதும் சேனாதிபதியாகவுள்ள கலிப்பகையார் என்பவருக்கு விவாகஞ் செய்வதாக நிச்சயித்தார்கள். விவாகம் நிறைவேறுவதற்கு முன் கலிப்பகையார் யுத்தத்திற்குச் சென்றபோது யுத்த களத்திலே மாண்டு வீரசுவர்க்கத்தை அடைந்தார். சில காலஞ் சென்றபின், புகழனாரும்சிவபதம் அடைந்தார். அப்போது அவர் மனைவியாகிய மாதினியாரும் உடன் கட்டையேறினர் கவலைக் கடலுள் மூழ்கிய திலகவதியாரும் மருணீக்கியாரும் தந்தைதாயருக்குச் செய்யவேண்டிய அந்திய கருமங்களையெல்லாஞ் செய்து முடித்தார்கள்.

இதன்பின்னர் கலிப்பகையார் இறந்துவிட்டாரென்ற செய்தி திலகவதியாருக்கு எட்டியது. என்னுடைய பிதா மாதாக்கள் என்னை அவருக்கே மணஞ் செய்ய நிச்சயித்தபடியால் "இவ்வுயிரை அவருக்கே இசைவிப்பேன்" என்று இறக்கத்துணிந்தார். அது கண்ட மருணீக்கியார் தமக்கையாருடைய பாதங்களில் விழுந்து அடியேனைக் கைவிட்டு இறப்பீராயின் அடியேன் உமக்கு முன்னரே இறந்துவிடுவேன் என்றார். அதைக் கேட்ட திலகவதியார் தனது தம்பிராருக்காக உயிர் வாழ்வதெனத் தீர்மானித்தார். இவ்வாறு இருக்கும் நாளில் மருணீக்கியார் சமண குருமாருடைய துர்ப்போதனைகளில் சிக்குண்டு சமண சமயத்திற் சேர்ந்தார். சமணர்கள் இவருடைய கல்வித்திறமையைப் பாராட்டித் "தருமசேனர்" என்னும் பட்டத்தைச் சூட்டித் தமது குருவாகக் கொண்டனர்.

தம்பியார் சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்தில் புகுந்ததைக் கண்டு தமக்கையார் வருந்தினர். மருணீக்கியாரைச் சமண் படுகுழியினின்றும் மீட்டுத் தருமாறு வீரட்டானேசுரரை வேண்டினர். இறைவன் திருவருளால் தருமசேனருக்குக் கொடிய சூலை நோய் ஏற்பட்டது, அந்நோயைத் தாங்க முடியாது தருமசேனர் மிகவும் வருந்தினர். சமணக் குருமாரது மணி, மந்திர, ஔஷதம் ஒன்றிலும் நோய் நீங்கவில்லை. தருமசேனர் சமணர்களுக்குத் தெரியாவண்ணம் புறப்பட்டு வந்து தமக்கையாரைச் சரண் புகுந்தார்.

தம்பியாரின்நிலமையைக் கண்ட திலகவதியார் தம்பியாரை உடன் அழைத்துக் கொண்டு வீரட்டானேசுரர் சந்நிதியை அடைந்தபோது தருமசேனருக்கு ஞானம் உதயமாயிற்று. அவர் வீரட்டானேசுரரை வணங்கி, "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்னும் சுவைமிக்க செந்தமிழ்த் தேவாரப் பதிகத்தைப் பாடினர். அப்பொழுது அவரது சூலை நோய் நீங்கியது. இதன் மேல் அப்பர் சுவாமிகள் பற்பல ஆலயங்கள்தோறும் சென்று பல செந்தமிழ்ப் பாடல்களையெல்லாம் பாடினர். அதனல் "திருநாவுக்கரசு" என்னும் பட்டப் பெயரைப்பெற்றார். திருநாவுக்கரசரின் செயலைக் கண்ட சமணர்கள் அரசனாகிய மகேந்திரபல்லவனுக்கு முறையிட்டனர். அரசன் திருநாவுக்கரசரை அழைத்து வரும்படி தூதனுப்பினன்.

தூதர்கள் சுவாமிகளை அழைத்தபோது "நாமார்க்குங் குடியல்லேம்" என்னும் மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப் பாடினர். பின்னர் சமணர்களால் ஏவப்பட்ட மகேந்திரபல்லவன் அப்பர் சுவாமிகளைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலே தள்ளும்படி கூறினன். அங்ஙனம் செய்யப்பட்டபோது அப்பமூர்த்திகள் "சொற்றுணை வேதியன்" என்னும் தேவாரப் பதிகத்தைப் பாடியதும் கல்லே தெப்பமாகக் கரை சேர்ந்தது. சுண்ணம்பு அறையிலே ஏழு நாள் அடைக்கும்படி ஆணையிட்டான். அப்பர் சுவாமிகளுக்கு அவ்வறை வீணைகானமும் தென்றலும் போலக் குளிர்ந்தது. யானையை ஏவியபோது அது அப்பமூர்த்திகளை வலம்வந்து வணங்கியது.

இந்த அதிசயங்களையெல்லாம் கண்ட அரசன் சைவ சமயமே மெய்ச்சமயமென்பதை உணர்ந்து சைவ சமயத்திலே பிரவேசித்தான். சமணப்பள்ளிகளையெல்லாம் இடித்துவிட்டுத் திருவதிகையில் பரமசிவனுக்குக் குணதரவீச்சரம் என்னும் கோயிலைக் கட்டினன். அதன்மேல் அப்பர் சுவாமிகள் சிவாலயங்களைத் தரிசிக்க விரும்பிப் பற்பல ஊர்கள்தோறும் சென்று அங்குள்ள மூர்த்திகளையெல்லாம் தரிசனஞ் செய்து தேவாரப்பதிகங்களைப் பாடினர். அதுமாத்திரமா? ஆலயங்கள்தோறும் தொண்டு செய்வதே தமது பணியாகக் கொண்டார். ஆலயங்களில் உள்ள புல் பூண்டுகள் முதலியவற்றை அகற்றுவதற்காகக் கையிலே உழவாரப்படையொன்றைத் தாங்கினர். இதனல் அவருக்கு "உழவாரப்படையாளி" என்னும் பெயரும் உண்டு.

எண்பத்தொரு ஆண்டுகள் பூமியில் தங்கியிருந்து சைவமதத்தை நிலை நாட்டிய அப்பர் சுவாமிகள் சித்திரைச் சதய நட்க்ஷத்திரத்தில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தார்.

"நம் கடம்பனைப்
பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத்
திருக்கரக் கோயிலான்
தன்கடன்அடி
யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி
செய்துகிடப்பதே".
(திருநாவுக்கரசர்)

### சிவபாதசுந்தரம்பிள்ளை திருநாள்

நாள்: சார்வரி ஹூ ஆடி மீ கச உ (29-7-60) வெள்ளிக்கிழமை

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

இரவு 7—7½ தெல்லிப்பழை தேவாரக்கோஷ்டியார்

7½—9 விரிவுரைகள்

1. திரு. பொ. கந்தையனர் அவர்கள்
2. தேச ஊழியன் திரு. நா. சேனதிராசா அவர்கள்.

சைவாபிமானிகள் யாவரும் அழைக்கப்படுகின்றனர்.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம் 21-7-60.

### ஸ்ரீ இராச ராசேஸ்வரி அம்பாளின் இரதோற்சவம்

நாயன்மார்கட்டு (பேச்சியம்பாள்) ஸ்ரீ இராச ராசேஸ்வரி அம்பாளின் இரதோற்சவம் ஆடி மீ 12உ (27-7-60) புதன்கிழமை நண்பகலில் நிகழும்.

### நீலகிரியில் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

இந்தியாவிலே நீலகிரிப்பகுதியில் தேயிலை உற்பத்தி சென்ற ஆண்டில் 1 கோடி 28 லட்சம் ரூத்தலுக்கு உயர்ந்திருக்கிறது.




## திருக்கேதீச்சர ஆலயத்தில்

### கதிர்காம சுவாமி விழா

சென்ற இரண்டு ஆண்டுகளாகக் கதிர்காம யாத்திரையை எதிர்பார்த்திருந்த முருகனடியாகள் திருக்கேதீச்சர ஆலயத்தில் வள்ளி தேவசேனாசமேதராய் திருக்கோலக் காட்சி அளிக்கும் கதிர்காம சுவாமி ஆகிய ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமானுக்கு விழா நடத்திச் சரவணப்பொய்கை, மாணிக்ககங்கை ஆகியவற்றிற்கிணையாம் பாலாவியில் தீர்த்தமாடி மகிழ்ந்தனர்,

இவ்வருடமும் இக்கலியுக வரதப் பெருமானுருக்குச் சென்ற வருடங்களிலும பார்க்க மிகச் சிறப்பாக விழா நடைபெற ஆலயப்பஞ்சாயத்தார் வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள். இவ்விழாக்கள் கதிர்காமத் திருவிழாக் கடைசி மூன்று தினங்களாகிய ஆடி 21, 22, 23-ம் (5-8-60) (6-8-60) (7-8-60) ஆகிய திகதிகளில் நடைபெறும். முதல் இரண்டு தினங்களில் பகல் வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் மாலை, தேவாரபாராயணம், புராண படனம், சைவப்பிரசங்கங்கள், முருக நாமப் பாடல் ஆகியனவும்; இரவு முருகப் பெருமான் வள்ளி தேவசேனா சமேதராய் வீதிவலம்வரும் விழாவும் நடைபெறும். மூன்றாம் நாள் காலையில் வள்ளி தேவசேனா சமேதராய் முருகப்பெருமான் எழுந்தருளிப் பாலாவியில் தீர்த்தமாடி நிறைந்து நிற்கும் அடியார்களுக்குக்காட்சிகொடுத்தருளுவார்.

இவ்விழாக்களில் அடியார்கள் காவடி எடுத்தல், முடி இறக்கல் முதலாம் நியம

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## போக்குவரத்து அறிவித்தல்

**நல்லூர் கந்தசுவாமிகோயில்**

**வருடமகோற்சவம் — 1960**

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெரு வீதிகள் **1960**ம் ஆண்டு ஆடி மாதம் **29**ந் திகதி தொடக்கம் ஆவணி மாதம் **23**ந் திகதி வரையும் எவ்வகையான வண்டிகளும் கீழ்க் காட்டப்படும் வீதிகளால் போக்கு வரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பெருந்தெருவில் அரசடிச் சந்திக்கும் 2ம் மைல் கல்லுக்குமிடையே உள்ள பாகம்.
(ஆ) பண்டாரக்குளத்து ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையேயுள்ள கோயிலின் வீதி.

2. சமயோசிதமாக மாற்றப்படும் தெருக்களின் விபரம்:

குறித்தகாலத்திலே வண்டிகள் இரதங்களைச் செலுத்துவோர் கீழே காட்டப்படும் தெருக்கள் மூலம் செலுத்துவார்களாக,

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் மார்க்கம் (அல்லது எதிர்ப்புறம்) போக்குவரவு செய்வோர் நாவலர் தெருவாலும் நல்லூர்க் குறுக்குத் தெருவாலும் செலுத்துக.
(ஆ) அரசடித் தெருமூலம் கோப்பாய் மார்க்கம் (அல்லது எதிர்ப்புறம்) செல்லுவோர் "உவைமன்" தெரு நாவலர்தெரு நல்லூர்க் குறுக்குத்தெரு மார்க்கமாகச் செலுத்திச் செல்லுக.

3. திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் இரதங்கள் மூலமாகச் செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ்வண்டிகளையும் இரதங்களையும் கொண்டுபோய் நிரலே ஒதுக்கிவிடுதற்கான தானங்கள் மூன்றிடத்தில் அமைககப்படுகின்றன. அவற்றைச் சாரதிகள் பயன்படுத்துவார்களாக.
(அ) அரசடித்தெருமூலமாகக் குறித்த கோயிலுக்குச் செல்லும் வண்டிகள் இரதங்கள் வீரமாகாளி அம்மன் கோயில் நிலத்தில் விடப்படலாம்.
(ஆ) தெற்கிலிருந்து கோயில் தெருவீதியால் வரும் வண்டிகள் இரதங்கள் கைலாயபிள்ளையார் கோவில் நிலத்தில்விடப்படலாம்,
(இ கோப்பாய் மார்க்கமாக வரும் வண்டிகள் இரதங்கள் முத்திரைச் சந்தை நிலத்தில் விடப்படலாம்.

ஏ. மகேந்திரன்,
வடமாகாணப் பாடிகாவலர்
உதவிப் பொறுப்பாளர்
(பொலீஸ் ஒப்பீஸ்)
பாடிகாவல நிலையம்,
யாழ்ப்பாணம். 6-7-60.
M 81 22-7-60.

## ஏந்திர கைத்தொழிற் சமாசம்

வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

நல்லசாதி மரத்தாற் செய்யப்பெற்ற மரக்கதவுகள், சாளரங்கள் (யன்னல்கள்) பலப்பல அளவுகளில் விலைக்கிருக்கின்றன. சுன்னுகம் "த பென்னின்சுலா ற்றேடிங் கோப்பறேஷன்" காட்சிப் பொருள் மண்டபங்களில் மாதிரியாயுள்ளவற்றைப் பார்வையிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏந்திர கைத்தொழிற் சமாசம்
### வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புறேஜெக்ரேஸ்)முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின்சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.


### திருக்கேதீச்சர ஆல்யத்தில்

3-ம் பக்கத் தொடர்ச்சி

கடன்களையும் முருகப்பெருமானுக்கு பிரீதியான ஏனைய கிரியைகளையும் பூர்த்தி செய்யலாம்.

இவ்வருட விழாவில் வடக்கு, கிழக்கு மகாணங்களைச் சேர்ந்த முருகனடியார்கள் பலரும் மலைநாட்டுச் சைவ அடியார்கள் பலரும் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் எனத் தெரிகின்றது. இங்ஙனம் பலபாகங்களிலுமிருந்து வரும் அடியார்கள் தங்குவதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் உண்டு. தினமும் அன்னதானமும் வழங்கப்படும்.

——


இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

## பலவிருத்திக் குளிகை

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புததளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக் கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1க்கு ரூ. 12-00,

### மூல வியாதிக்கு

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்
ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.
சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.
பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20.00
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.


## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 24-7-60—30-7-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நீர் இந்த வாரம் விரைந்து சண்டை தொடுப்பீர். கண் நோய்களுக்கும் இடமுண்டு. இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உமக்கு உதவுவர். ஆனால் தன லாபம் நிச்சயம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இடைஞ்சல்களிலிருந்து நீங்க இந்த வாரம் இளைய சகோதர சகோதரிகள் உதவுவார்கள். நடைமுறைகளிற் சில மாற்றங்களுக்கிடமுண்டு. புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனாற் சித்தியாகும்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம். உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சில நீக்கப்படும், கமத்தொழில் முயற்சிகள்மூலம் இலாபங்கள் நிச்சயம். ஆனால் வழக்கத்திலும் செலவு கூடுதலாயிருக்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

எதிர்ப்பிருந்தபோதிலும் உம்முடைய முயற்சிகளில் நீர் சித்தியடையக்கூடியதாயிருக்கும், பகைவர் அழிவுக்கிடமுண்டு. பணத்துறையில் நல்ல வாரம்,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

உம்முடைய தேகசுகமளவில் இது ஒரு நல்லவாரமல்ல. கண் நோய்களுக்கிடமுண்டு. ஆனால் உத்தியோகத்துறையில் நல்ல வாரம். கமத்தொழில் முயற்சிகள் நல்ல பலனைத்தரும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சில நீங்கும். நண்பரும் இனத்தவரும் அதிக உதவியாயிருப்பர். செலவதிகரிக்கும். ஆனால் அவற்றைச் சமாளிக்க நீர் போதியது பெறுவீர்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இந்த வாரம் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு. உத்தியோகத் துறையில் ஒரு நல்ல வாரம், நீர் அதிக புகழ் ஈட்டுவீர். நண்பர் எல்லைகடந்து உமக்கு உதவுவார்கள்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

திரும்பவும் ஒரு நல்ல வாரம். நீர் எல்லா எதிர்ப்பையும் நீக்கக்கூடியதாயிருக்கும், பிதா வழி இனத்தவர் அதிக உதவியாயிருப்பர், ஆனால் வார இறுதியில் சிறு குடும்பத் தொந்தரவுகளுக்கிடமுண்டு,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முதல் இரு நாட்களும் தளப்பமாயிருக்கும். சிறு சுகவீனங்களுக்கும் குடும்பத் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு, உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. பின் அரை வாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

நண்பர்கள் இனத்தவர்களுடன் இந்த வாரம் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. குடும்பக்குழப்பங்களுக்கும் இடமுண்டு. செவ்வாய் புதனும் வியாழம் காலையும் எல்லாவற்றிலும் பழுதானவை,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தேகசுகம் சிக்கலாயிருக்கும் குடும்பக்குழப்பங்களுக்கும் இடமுண்டு. ஆனால் உத்தியோகத் துறையில் நல்ல வாரம். நண்பர் அதிக உதவியாயிருப்பர். வியாழம் வெள்ளி சனி காலை கவனமாய்க் கழிக்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

கடைசி நாள்தவிர இந்த வாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், புது முயற்சிகள் சித்தியாகும், பகைவர் அழிவுக்கும் சமூகசித்திக்கும் இடமுண்டு. கடைசி நாளைத் கவனமாய்க் கழிக்கவும்,

## அடைவு நகை

### ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைறோட்டில் 207ம் இலக்க கடையில் சோம-மு-இராமநாதன் அவர்களிடம் 1-4-58ந் திகதி தொடக்கம் 31-12-58ந் திகதி வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1960ஹூ ஆகஸ்டுமீ 5உ (5-8 60) ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவுகாரரும்
விலை மதிப்பாளரும்,
13-7-60.
M. 79 15, 22-7-60


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசத்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்
Std 14


பாட்டிஷன் சட்டப்படி

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு வழக்கு

வழக்காளி:

1, தம்பு கிறிஷ்ணபிள்ளை
2. பெண் அன்னப்பிள்ளை
இருபேரும் அல்வாய் மேற்கு.

வழக்கு இலக்கம்: 5240

எதிராக:

1, வல்லிபுரம் சின்னத்தம்பி
2. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
3. பெண் அன்னப்பிள்ளை
4, முருகுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
5. முருகர் கதிரித்தம்பி
6. பெண் செல்லம்
7, வேலுப்பிள்ளை தம்பையா
8, பெண் சின்னப்பிள்ளை எல்லோரும் அல்வாய் மேற்கு.
9, கிருஷ்ணபிள்ளை நித்தியசுந்தரஸ்வாரர் கொல்லங்கலட்டி தெல்லிப்பளை G. A. L,
10, வல்லிபுரம் செல்லையா
11, வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
12. பெண் நாகமுத்து
13. கதிர்காமர் வல்லிபுரம்
14. பெண் வயிராத்தை
15. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
16. V. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
17. பெண் சின்னச்சிப்பிள்ளை
18. கணபதிப்பிள்ளை மகாதேவா எல்லோரும் அல்வாய் மேற்கு

எதிரிகள்,

மேற்குறித்த இலக்கப் பாட்டிசன் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் அககோட்டால் அநுமதிக்கப்பட்ட விற்பனை நிபந்தனைகளின் படியும் அவ்வழக்கில் கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட அதிகாரப்பத்திரத்தின்படியும் உலாந்தா மேஸ்தர் V. சிவரத்தினம் அவர்களால் 1959-ம் ஆண்டு ஆடி மாசம் 12-ந் தேதி 1967-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் 1, 2, துண்டுகளாகக் காட்டப்பட்டும் பின்னால் காணும் டாப்பில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1960-ம் ஆண்டு ஆவணி மாசம் 24 தேதி புதன் கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் குறித்த ஆதனங்களினிடமாக விருந்து முதலாவதாக ஒவ்வொரு துண்டுக்கும் கோட்டால் அனுமதிக்கப்பட்ட மதிப்புக்குக் குறையாத விலைக்கு பங்காளிகளுக்குள்ளும் அவ்விதம் பங்காளிகள் அம் மதிப்பிற்குக் குறைபாத விலைக்கு வாங்கத் தவறின் உடனேயே பிரசிதத ஏலத்திலும் என்னால் விற்கப்படும்.

ஆதனடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக்கோயிற்பற்று அல்வாய் மளவராய குறச்சி காவல் ஒல்லை. நிலப்பரப்பு 3, குளி 3 18/32. இது உலாந்தா மேஸ்தர் V. சிவரத்தினம் அவர்களால் 1959-ம் ஆண்டு ஆடிமாசம் 12-ந் தேதி 1967-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு இந்த வழக்கில் அணைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் நாகமுத்துவிற்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம், வடக்கு K, கதிர்காமத்தம்பிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு றோட்டு, தெற்கு குறித்த வழக்கில் முதலாம் வழக்காளிக்கும் முதலாம் எதிரிக்கும் உடைய ஆதனம். இதில்,

1. ஓராந்துண்டுக்குரிய நிலப்பரப்பு 1 குளி 10 25/32. எல்லை கிழக்கு கிருஷ்ணபிள்ளை பெண் நாகமுத்துவுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். வடக்கு குறித்த படத்தில் 2-ம் நம்பர் துண்டு. மேற்கு றோட்டு. தெற்கு குறித்த வழக்கில் முதலாம் வழக்காளிக்கும், முதலாம் எதிரிக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா. 3,000/-

2. இரண்டாம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 1 குளி 10 25/32. எல்லை கிழக்கு கிருஷ்ணபிள்ளை பெண் நாகமுத்துவிற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். வடக்கு K. கதிர்காமத்தம்பிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். மேற்கு றோட்டு. தெற்கு குறித்த படத்தில் 1-ம் நம்பர்த்துண்டு. இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா, 2,500/-

கா, முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சந்நிதிவேல்,
பருத்தித்துறை, 15-7-60.
M. 80 22-7-60.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 22-7-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org